DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of civil procedure)
IN THE COURT OF SUBORDINATE JUDGE,
KEERANUR
CASE NO.OS.No.352/2022
Deposition of witness of Plaintiff – P.W.1(பிச்சை)
22.07.2025

3ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:

1. நான் எனது வழக்கறிஞரிடம் அனைத்து விவரமும் சொல்லிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா அ,ஆ, இ அயிட்ட சொத்துக்கள் எத்தனை சொத்துக்கள் அதன் சர்வே எண் மற்றும் விஸ்தீர்ணம் தெரியுமா என்றால் தெரியும். அ அட்டவணை சொத்தின் சர்வே எண் 125/2எ விஸ்தீர்ணம் 10 சென்ட். ஆ அட்டவணை சொத்தின் சர்வே எண் விஸ்தீர்ணம் என்னவென்றால் நான் 3 சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை. ஒரு சொத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2. தாவா சொத்து ஆதியில் யாருக்கு சொந்தமானது என்றால் சி.பழனி என்ற பழனியப்பனுக்கு பாத்தியப்பட்டது. எனது தகப்பனார் இறந்துவிட்டார்.எனது தகப்பனாரின் இறப்பு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனாரின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. பாப்பு, ஆறுமுகம், கோபால் ஆகியோர் எனக்கு என்ன உறவு முறை என்றால் பாப்பு எனது அண்ணன், ஆறுமுகம் மற்றும் கோபால் எனது தம்பிகள். அவர்கள் 3 பேரும் இறந்துவிட்டனர். அவர்கள் 3 பேருடைய வாரிசுகளை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

4. எனது இதர சொத்துக்கள் குறித்து இவ்வழக்கில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். பாப்பு தனியாக வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் சரிதான். ஆறுமுகம் தனியாக வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். கோபாலுக்கு வீடு இல்லை, இடம் மட்டும் உள்ளது.

5. பட்டா எண் 767 என்பது ப.பிச்சை என்பதற்கு பதிலாக பெ.பிச்சை என தவறுதலாக பதிவு ஏற்பட்டுள்ளது தொடர்பாக 4, 6 பிரதிவாதிகளிடம் நான் மனு கொடுத்தேன் என்றால் 2007ஆம் ஆண்டு பட்டா மாற்றுவதற்காக வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேன். அதன் பிறகு 2008ல் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தேன். அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை.

6. சர்வே எண் 125/2 எ சொத்திற்காக கணினி பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பழனி என்ற பழனியப்பனின் ஆதார் அடையாள அட்டை, குடும்ப அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

7. ப.பிச்சை என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது சகோதரர்கள் மற்றும் அவர்களது பிள்ளைகளிடம் இவ்வழக்கு தொடர்பாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

8. பாப்பு, ஆறுமுகம், கோபால் ஆகியோருடைய வாரிசுகளிடம் குடும்ப அட்டை மற்றும் ஆதார் அடையாள அட்டை நான் கேட்கவில்லை என்றால் சரிதான்.

9. சர்வே எண் 125/2எ ல் ஒரு பகுதியில் பாப்பு மகன் பாரதி அஸ்திவாரம் போட்டு உள்ளது என்றால் சரிதான். இ பட்டியல் சொத்தில் ஆறுமுகம் மகன் கோவிந்தராஜ் அஸ்திவாரம் போட்டு அப்படியே உள்ளது என்றால் சரிதான்.

10. பட்டா எண் 767ல் பெ.பிச்சை, சி.பழனியப்பன், ஆறுமுகம் ஆகியோர் பெயரில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எங்கள் பெயரில் தான் உள்ளது. பெயர் மாறிவிட்டது. பட்டாவில் குறிப்பிட்டுள்ள பிச்சை பெரியதம்பி மகன் பிச்சை என்றால் சரியல்ல. பட்டாவில் குறிப்பிட்டுள்ள ஆறுமுகம் பெயருக்கு முன்பு இனிசியல் இல்லை என்றால் சரிதான். பட்டா எண் 767ல் பாப்பு மற்றும் கோபால் பெயர் இல்லை என்றால் சரிதான்.

11. எனது அப்பா மற்றும் ஆறுமுகம் பெயரில் எவ்வித பட்டாவும் இல்லை என்றால் சரியல்ல. பாப்பு, ஆறுமுகம், கோபால் ஆகியோரின் வாரிசுகளை

சேர்த்தால் வழக்கின் தன்மை தெரிந்துவிடும் என்பதால் அவர்களை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

12. 1ஆம் பிரதிவாதியின் சகோதரர் ம.பிச்சை இறந்து 20 வருடங்களுக்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். ம.பிச்சையிடம் இருந்து 05.02.1970 ஆம் தேதி பழனி மகள் பிச்சாயி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. அவர் சர்வே எண் 125/2பில் தான் கிரையம் வாங்கியுள்ளார்.

3ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஒம்/–திரு.C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.